# IN THE HON’BLE COURT OF THE DISTRICT MUNSIF, PAPPIREDDIPATTI.

## OS.41/2019

## Deposition of PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பௌசியா | Father/Husband's Name | : | அசீம்கான் |
| Village | : | பொம்மிடி | Taluk | : | பாப்பிரெட்டிப்பட்டி |
| Age | : | 28 | Calling | : | |
| Religion | : | இஸ்லாமியர் | | | |

2ம் வாதி மற்றும் வாதிகளின் வழக்கறிஞர் ஆஜர். 3ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் ஆஜர்.

**Solemnly affirmed/sworn by Tr.T.Karthick, Assistant, in accordance with the provision Section.6 of Oaths act of 1969 on this 12th day of January 2026.**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 2-ம் வாதியாவேன். நான் தற்போது பொம்மிடி கிராமத்தில் வசித்து கொண்டு வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். நான் மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்த பின்னர் தான் அதில் கையொப்பம் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணையாக ஏற்றுக் கொண்டு, இதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எங்களது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து, தாவாவில் நாங்கள் கோரியுள்ள தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வா.சா.1—ன் வேண்டுகோளுக்கு இணங்க பின்வரும் ஆவணங்கள் வாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | தாவா சொத்துக்கள் குறித்து வாதிகள் அரூர் சார்பு நீதிமன்றத்தில் OS.No.82/2009 வழக்கில் பெறப்பட்டுள்ள முதல் நிலை தீர்ப்பாணை | 09.04.2012 | சான்று நகல் | வா.சா.ஆ.1 |
| 2 | தாவா சொத்துக்கள் குறித்து வாதிகள் அரூர் சார்பு நீதிமன்றத்தில் OS.No.82/2009 வழக்கில் பெற்ற தீர்ப்பு | 09.04.2012 | சான்று நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | தாவா சொத்துக்கள் குறித்து அரூர் சார்பு நீதிமன்றத்தில் IA.No.361/2015 இறுதி நிலை தீர்ப்பாணைக்கு தாக்கல் செய்துள்ள மனு. | 09.09.2015 | சான்று நகல் | வா.சா.ஆ.3 |
| 4 | 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய பத்திரம் | 09.04.2014 | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.4 |
| 5 | 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய பத்திரம் | 21.12.2018 | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.5 |
| 6 | 3ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய பத்திரம் | 21.12.2018 | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.6 |

3—ம் பிரதிவாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1—ன் குறுக்கு விசாரணையானது ஒத்தி வைக்கப்படுகிறது.

SARANYA M

Digitally signed by SARANYA M
Date: 2026.01.12 04:01:39 +0530